### கல்வி - சுகாதாரம் - விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும்

# தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## அண்ணாநகரில் நடைபெற்ற விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, அக். 19 -**

**“கல்வி - சுகாதாரம் - விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு” என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அண்ணாநகரில் நடைபெற்ற விழாவில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.**

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை, மகளிருக்கு தையல் இயந்திரம், மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சி அண்ணா நகரில் 15.10.2023 அன்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

“300 மாணவர்களுக்குத் தலா ரூ.10 ஆயிரம் கல்வி உதவித்தொகை மற்றும் 750 பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று உங்களையெல்லாம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், சட்டமன்ற மன்ற உறுப்பினர்களுக்கும், பகுதி, கழக நிர்வாகிகளுக்கும், என்னுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு மாவட்டக் கழகச் செயலாளர் சொன்னதைப்போல மழை ஒரு பக்கம் பயமுறுத்திக் கொண்டிருந்தாலும் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு அவர்களுக்கு எனது தனிப்பட்ட வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாணவர்கள் பக்கம் நிற்கின்ற இயக்கம் தி.மு.க.!**

இன்று காலை விளையாட்டுத்துறையின் சார்பாக, வேறொரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். அந்த நிகழ்ச்சி மழையிலேயே நடந்தது. சைக்கிள் போட்டி. எனவே இந்த நிகழ்ச்சி மழையிலேயே நடக்கும் என்ற எண்ணத்தோடுதான் நான் வந்தேன். இருந்தாலும், நீங்கள் அத்தனைப்பேரும் பொறுமையோடு இந்த நலத்திட்டங்களையெல்லாம் பெற வந்துள்ளீர்கள்.

ஆட்சியில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி என்றைக்கும் மாணவர்கள் பக்கம் நிற்கின்ற இயக்கம்தான், திராவிட முன்னேற்றக் கழகம். அதற்கு இந்த ஒரு நிகழ்ச்சியே சிறந்த எடுத்துக்காட்டு.

இன்னும் சொல்லப்போனால் இதே திடலில் பல நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் நானே கலந்துகொண்டுள்ளேன். இங்கு நம்முடைய அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது சொன்னார். அவர் செய்த பல்வேறு நலத்திட்ட உதவிகள் அனைத்தையும் சொன்னார்கள். அவர் ஒரு திட்டத்தைச் சொல்ல மறந்து விட்டார்.

மாற்றுத்திறனாளிகளை சினிமா படத்திற்கு அழைத்துச் சென்றேன். கடற்கரைக்கு அழைத்துச் சென்றேன். அப்படியெல்லாம் சொன்னார். ஆனால், அவர் தன்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய மாற்றுத் திறனாளிகளையெல்லாம் ஒருங்கிணைத்து சேப்பாக்கம் - திருவல்லிக்கேணியில் இருக்கக் கூடிய விளையாட்டு மைதானத்திற்கு ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கும் அவர் அழைத்துச் சென்று வந்தார். அதைச் சொல்ல அவர் மறந்துவிட்டார். அதை இந்த நேரத்திலே நினைவுப்படுத்த விரும்புகின்றேன்.

**திட்டங்களை சிதைக்கப் பார்க்கும் ஒன்றிய அரசு!**

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மாணவர்களால் உருவான இயக்கம். அதனால்தான் தி.மு.கழகத்தின் எந்தவொரு முக்கிய நிகழ்வினை எடுத்துப் பார்த்தாலும், அதில் மாணவர்களுடைய பங்களிப்பு இருக்கும். நாடே போற்றுகின்ற கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் செயல்படுத்தி, 1 கோடியே 6 லட்சத்து 52 ஆயிரம் மகளிருக்கு மாதாமாதம் 1000 ரூபாய் வழங்கப்படுகின்றது. சென்ற மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. இந்த மாதம் ஒவ்வொரு மகளிருக்கும் பயனாளிகளுக்கும் 1 கோடியே 6 லட்சத்து 52 ஆயிரம் மகளிருக்கு இரண்டாவது தவணையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது.

இப்படியெல்லாம் பார்த்துப் பார்த்து நாம் திட்டங்களைத் தீட்டினால், ஒன்றிய அரசு, இவற்றையெல்லாம் சிதைக்கப் பார்க்கின்றது. நீட் நுழைவுத்தேர்வை கலைஞர் ரத்துச் செய்தார். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருக்கும்போது நீட் தேர்வு தமிழ்நாட்டிற்குள் வரவில்லை. ஆனால், நீட் தேர்வு எப்படி தமிழ்நாட்டிற்குள் வந்தது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

**‘நீட்’: மாணவர்களின் கனவை சிதைத்த ஒன்றிய அரசு!**

நீட் தேர்வைக் கொண்டு வந்து நம் மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைத்த ஒன்றிய அரசு, தற்போது, மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் இடங்களைத் தொடங்குவதற்கும் தடை போட்டுள்ளது. ஒரே நாடு - ஒரே மொழி - ஒரே மதம் - ஒரே உணவு என மாநிலங்களுக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது.

அதிக வரி செலுத்துகின்ற மாநிலத்துக்குக் குறைந்த மக்களவைத் தொகுதி என்பதை ஒருபோதும் நாம் ஏற்க முடியாது. 2014ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு இந்த ஒன்பது ஆண்டுகளில், மாணவர்கள் நீங்கள் இதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

2014 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசு ரூ.5 லட்சம் கோடி ரூபாயை ஒன்றிய அரசுக்கு வரியாக, நிதியாகக் கட்டியுள்ளது. இந்த ஒன்பது ஆண்டுகளில் நாம் கொடுத்தது 5 இலட்சம் கோடி. ஆனால் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு திருப்பிக் கொடுத்தது வெறும் 2 இலட்சம் கோடி. ஆனால், 3 லட்சம் கோடி மட்டும் வரி கட்டிய உத்தரப்பிரதேசத்துக்கு, கடந்த 9 ஆண்டுகளில் 9 லட்சம் கோடி அளவுக்கு வரிப்பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. இந்த அநீதியைத்தான் நாம் ஒழிக்க வேண்டும் என்று போராடிக்கொண்டிருக்கிறோம்.

**விளையாட்டுத் துறையிலும் பாகுபாடு!**

இந்த விளையாட்டுத்துறையிலும் இதே பாகுபாடு தொடர்கிறது. குஜராத் மாநிலத்திற்கு, சென்ற ஆண்டு விளையாட்டு மேம்பாட்டு நிதியாக ஒன்றிய அரசு வழங்கியது, விளையாட்டு மேம்பாட்டு கட்டமைப்புகள், ஸ்டேடியம் கட்டமைப்பதற்கு ஒன்றிய அரசு குஜராத் மாநிலத்திற்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு தெரியுமா 608 கோடி ரூபாய். ஆனால், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கிய நிதி 38 கோடி ரூபாய். குஜராத்திற்கு 608 கோடி, ஆனால், தமிழ்நாட்டிற்கு வெறும் 38 கோடி ரூபாய்.

ஆனால், குஜராத் மாநிலம், சமீபத்தில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், எவ்வளவு பதக்கம் வாங்கினார்கள் தெரியுமா, ஒரு பதக்கத்தைக் கூடப் பெறவில்லை. தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் 28 பதக்கங்களைப் பெற்று நமக்கெல்லாம் பெருமை சேர்த்திருக்கிறார்கள். கல்வி - சுகாதாரம் - விளையாட்டு என அனைத்துத் துறையிலும், ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சித்து வருகின்றது.

இந்திய பிரதமர் மோடி அவர்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திற்குச் சென்றாலும், நம்முடைய தலைவரைப் பற்றியும், நம்முடைய கழக அரசசைப் பற்றியும்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அவருக்கு எப்போது பார்த்தாலும் நம்மைப் பற்றித்தான் ஞாபகம். என்ன சொல்கிறார் தெரியுமா?

தி.மு.க.வுக்கு வாக்களித்ததால், கலைஞர் குடும்பம்தான் வாழுகின்றது என்று சொல்கிறார். ஆமாம் நான் சொல்கிறேன் தமிழ்நாடு முழுவதும் நம்முடைய கலைஞருடைய குடும்பம்தான். நான் இப்போது உங்களைப் பார்த்துத் திருப்பிக் கேட்கின்றேன். ஒன்றிய பிரதமர் நரேந்திர மோடி அவர்களே, ஒன்பது ஆண்டுகாலம் ஆட்சி செய்திருக்கிறீர்களே, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று உங்களால் பட்டியலிட முடியுமா? என்று நான் கேட்கிறேன்.

ஒவ்வொருத்தருடைய வங்கிக் கணக்கில் 15 லட்சம் போடுகிறேன் என்று சொன்னீர்களே போட்டிங்களா. குறைந்தது 15 காசாவது போட்டிங்களா, எதுவும் செய்யவில்லை. ஆனால், உங்களுடைய ஒன்பது ஆண்டு ஆட்சி காலத்தில் ஒரே ஒரே குடும்பம் மட்டும் வாழ்ந்தது. யாரு அந்தக் குடும்பம். உங்களுடைய நெருங்கிய நண்பர் அதானி அவர்கள். அதாவது அரசிடம் இருக்கக்கூடிய அனைத்து



பொதுத்துறையையும் தூக்கி அதானி கையில் கொடுத்துவிட்டார் பிரதமர்.

அதானி ஏர்போர்ட் வந்துவிட்டது, அதானி இரயில்வே வந்துவிட்டது, அதானி சாலை வந்துவிட்டது, அதானி மின்சாரம், அதானி துறைமுகம் இப்படி அனைத்தையும் அதானி கிட்ட தூக்கி கொடுத்துவிட்டார். நான் பல முறை நகைச்சுவையாகச் சொல்வதுண்டு. மோடி அவர்கள் தொடர்ந்து வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டே இருப்பார். அப்போது சொல்வேன், நீங்கள் விமானத்தில் போறீங்க, விமானி இல்லாமல் கூடப் போவீங்க, ஆனால், அதானி இல்லாமல் போக மாட்டீங்க என்று. இதைத்தான் நம்முடைய காங்கிரஸ் பேரியக்க தலைவர் ராகுல் காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்டார். ஆனால் இப்போது வரைக்கும் அதற்குப் பதில் கிடையாது.

ஹிண்டன்பெர்க் என்ற ஆய்வு செய்கின்ற ஒரு நிறுவனம். ரிசர்ச் செய்கின்ற ஒரு அமெரிக்க நிறுவனம். அவர்கள் ஒரு தனியார் நிறுவனம் 9 வருடத்தில் எப்படி இவ்வளவு வளர்ச்சி அடைந்தது என ஆய்வு வெளியிட்டார்கள். அதானி அவர்கள் அப்போது உலகப் பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடம். இதையெல்லாம் இந்த ஹிண்டன்பெர்க் நிறுவனம் கேள்வி கேட்டார்கள். ஆனால், இதுவரைக்கும் மோடி அவர்களோ, பா.ஜ.க.வோ இதைப் பற்றி வாய் திறக்கவே இல்லை.

**மின் கட்டணம் உயர அதானிதான் காரணம்!**

இப்போது சமீபத்தில் லண்டனிலிருந்து வருகின்ற ‘பினான்சியல் டைம்ஸ்’ இன்னொரு முறைகேட்டையும் வெளியிட்டுள்ளது. அதாவது இன்றைக்கு நாட்டின் பல இடங்களில் மின்சாரக் கட்டணம் உயர்ந்ததற்கு அதானிதான் காரணம் எனப் பினான்சியல் டைம்ஸ் ஆதாரத்தோடு கட்டுரை எழுதியுள்ளது.

அதுமட்டுமல்ல, சமீபத்தில் வந்த CAG அறிக்கை. Controller of Audit General. இந்த அமைப்பின் வேலை என்னவென்றால் மத்திய அரசு, மாநில அரசு செய்கின்ற செலவுகளைத் தணிக்கை செய்வது. இதைப் பார்த்தால் சி.ஏ.ஜி அறிக்கைப்படி இந்த 9 ஆண்டுகளில் ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்கு கணக்கே கிடையாது. ஏழரை இலட்சம் கோடி ரூபாய் எங்கே போனது என்றே தெரியவில்லை.

ஆயுஷ்மான் பாரத் என்ற ஒரு திட்டம் அதில் இறந்துபோன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவக் காப்பீடு செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல துவாரக் அப்படி என்ற ஒரு திட்டம். துவாரக் மாலா என்ற ஒரு திட்டம். இதில் 1 கிலோ மீட்டர் ரோடு போடுவதற்கு ரூ.250 கோடி செலவு செய்திருப்பதாக இந்த சி.ஏ.ஜி. ரிப்போர்ட் சொல்கிறது. இதைத் தொடர்ந்து நம்முடைய தலைவர் அவர்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் இதற்கெல்லாம் வாய்த் திறக்க வழியில்லை.

**கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான ஆட்சி!**

இதுமட்டுமல்ல, இந்த 9 ஆண்டுகளில் ரூ.12 லட்சம் கோடி மதிப்பிலான கார்ப்பரேட் கடன்கள் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இது முழுக்க முழுக்க கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான ஆட்சி இந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு என்று மோடி சொன்னார்கள். ஆனால், 5 லட்சம் வேலைவாய்ப்பைக் கூட இதுவரை உருவாக்கவில்லை.

2014 ஆம் ஆண்டு மோடி அவர்கள் சொன்ன தேர்தல் வாக்குறுதி என்ன? இந்தியாவை நான் வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன். எப்போது தெரியுமா சொன்னார். 2014-ஆம் ஆண்டு சொன்னார். 2020-இல் இந்தியா வல்லரசாக மாறியிருக்கும் என்றார். இப்போது 2023-இல் திருப்பியும் அதையே சொல்கிறார். என்ன தெரியுமா சொல்கிறார். இந்தியாவை நான் வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன். எப்போது தெரியுமா? 2047இல் மாற்றிக் காட்டுவேன் என்று சொல்கிறார்.

**இந்தியாவை மாற்றிக் காட்டுவேன் என்றவர் ‘பாரத்’ என மாற்றி காட்டுகிறார்!**

ஆனால், ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் ஒன்றிய பிரதமர் மோடி அவர்களை நாம் அனைவரும் பாராட்டியே ஆக வேண்டும். என்ன சொன்னார், இந்தியாவை மாற்றிக் காட்டுவேன் என்று சொன்னார். இப்போது என்ன செய்கிறார் இந்தியா என்ற பெயரை பாரத் என மாற்றுகிறார்.

இங்கே ஒரு எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்கிறதா என கேட்டால் எதிர்க்கட்சி என்று பேருக்குத்தான் சொல்வார்கள். என்றைக்காவது அவர்கள் மக்களைப்பற்றிப் பேசியிருக்கிறார்களா? அவர்கள் பிரச்சினை எல்லாம் எப்போதுமே நாற்காலி பற்றித்தான் யோசனை. இப்போதுகூட, சட்டசபையில் அவர்கள் மக்கள் பிரச்சினையைப் பற்றிப் பேசினார்கள் என்று நினைக்கிறீர்களா, மக்கள் பிரச்சினைகளுக்காக வெளிநடப்புச் செய்தார்கள் என்று நினைக்கிறீர்களா இல்லை. யார் பக்கத்தில் யார் உட்கார வேண்டும். எங்களுக்கு அவர் பக்கத்தில் உட்கார முடியாது, இவர் பக்கத்தில் உட்கார முடியாது. எங்களுக்கு உட்காரும் இருக்கையை மாற்றிக் கொடுங்கள். இதுதான் எதிர்க்கட்சியினுடைய பிரச்சினை.

5 முறை தமிழ்நாட்டை ஆட்சி செய்த, இந்திய ஒன்றியத்தின் மாபெரும் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உடல்நிலையைக் கருதி, அப்போது நாம் எதிர்க்கட்சி. நாம் ஒரு வேண்டுகோள் வைத்தோம். கலைஞர் அவர்கள் சட்டப்பேரவைக்கு வந்து செல்லும்படி இருக்கை வசதி செய்து கொடுங்கள் என்று. அதைப்பற்றிக் கவலைப்படாமல் அதைச் செய்து கொடுக்காதவர்கள் இப்போது நாற்காலியைப் பற்றிப் பேசுகிறார்கள்.

இப்போது பா.ஜ.க.வினரும் - அ.தி.மு.க.வினரும் ஒரு புதிய நாடகத்தைத் தொடங்கியுள்ளார்கள். பா.ஜ.க. அணியிலிருந்து அ.தி.மு.க. வெளியேறிவிட்டது என்று ஒரு நாடகம். இது முதல்முறை கிடையாது. ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும், பின்பும் அவர்கள் இந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் வருகிறார்கள். மறைந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள், தைரியமாகக் கேட்டார்கள். மோடியா, இல்லை இந்த லேடியா என்று கேட்டார்கள். ஆனால், இந்த அடிமைகள், எல்லாம் என்ன சொன்னார்கள். மோடிதான் எங்கள் டாடி என்று சொன்னக்கூட்டம்தான் இந்த அடிமைக்கூட்டம்.

நீட் தேர்வு, ஜி.எஸ்.டி. உதய் மின் திட்டம், தேசிய கல்விக்கொள்கை, வேளாண் விரோத சட்டங்கள், குடியுரிமைத் திருத்த சட்டம் என ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்த அத்தனை மக்கள் விரோத சட்டங்களையும் ஆதரித்து நாடாளுமன்றத்தில் வாக்களித்தவர்கள்தான் இந்த அடிமை அ.தி.மு.க.வினர். தமிழ்நாட்டின் உரிமைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து பறித்து வந்த போதும் 2019 நாடாளுமன்றத் தேர்தலின்போதும், 2021 சட்டமன்றத் தேர்தலிலும் தொடர்ந்து பா.ஜ.க.வோடு இந்த அடிமைகள் கூட்டணி வைத்தார்கள், இது மக்களுக்குத் தெரியும்.

இதையெல்லாம் செய்துவிட்டு, இன்றைக்கு தமிழ்நாட்டின் உரிமையைக் காப்பதற்காகத்தான் கூட்டணியில் இருந்து வெளியேறினோம் என்று பொய் சொல்லுகின்றார்கள். இப்போது கூட்டணியை முறித்துக் கொண்டது கூட காவிரி பிரச்சினைக்கோ, நீட் தேர்வுக்காகவோ அல்லது தமிழ்நாட்டினுடைய உரிமைகளுக்கோ கிடையாது.

**அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி முறிவு நாடகம் எதற்காக?**

எதார்த்த உண்மை என்னவென்றால்,, பா.ஜ.க.வோடு கூட்டணியை முறித்துக் கொள்வதாக அறிவிக்கும் தைரியம் அடிமைகளுக்குக் கிடையவே கிடையாது. அவர்கள் இப்போது செய்வது வெறும் நாடகம் மட்டுமே. அந்த script கூட மோடியும் அமித்ஷாவும் எழுதி கொடுத்ததுதான். கூட்டணி முறிவு என்று சொல்வதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள். டெல்லிக்குச் சென்று வந்தார்கள். அது எப்படியென்றால் யாருக்குமே தெரியாமல். அங்கே சென்று பா.ஜ.க. தலைவர்களையெல்லாம் சந்தித்து வந்தார்கள்.

திருட்டுத்தனமாகச் சந்தித்து வந்தார்கள். சென்னையிலிருந்து டெல்லிக்கு எப்படித் தெரியுமா போனார்கள்? இங்கிருந்து 2 முன்னாள் அமைச்சர்கள் கொச்சின் சென்று, அங்கிருந்து டெல்லிக்கு, இந்தப்பக்கம் 2 அமைச்சர்கள் பெங்களூருவிலிருந்து டெல்லிக்குப் போனார்கள். ஏனென்றால் யாருக்கும் தெரியக்கூடாதாம். அப்படிப்பட்ட அந்த அடிமைகள் கூட்டம்தான் இங்கு இருந்து கொண்டிருக்கிறது.

எடப்பாடி பழனிச்சாமி மட்டுமல்ல, அ.தி.மு.க.வின் முன்னணித் தலைவர்கள் அனைவரும் அதே கருத்தைத்தான் இப்போது சொல்வார்கள். நாம் ஏமாறுவோம் என்று நினைக்கிறார்கள். தயவுசெய்து தமிழ்நாட்டு மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, சிறுபான்மை மக்கள் நலன் காப்போம் என்று நாடகம் போடுகிறார். ஆனால் இந்த நாடகமெல்லாம் மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

**வெல்வது ‘இந்தியா’ கூட்டணிதான்!**

அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழ்நாட்டு மக்களுக்கு இரண்டுமே ஒன்றுதான். பா.ஜ.க.தான் அ.தி.மு.க., அ.தி.மு.க.தான் பா.ஜ.க.. இவர்கள் தனியாக வந்தாலும் சரி. சேர்ந்து வந்தாலும் சரி. வெல்லப்போவது என்னவோ நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். நம்முடைய இந்தியா கூட்டணிதான்.

இங்கே அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அதேபோல் சிற்றரசு அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். நாங்கள் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தலைவர் அவர்கள் யாரை வேட்பாளராக அறிவித்தாலும், எங்களுக்குள் ஒரு போட்டி எந்தத் தொகுதி அதிகமான வாக்குகளை பெறுகிறது. வெற்றி பெறுவதற்கான வாக்கு வித்தியாசம் சேப்பாக்கமா அல்லது அண்ணா நகரா என்று எங்கள் மூன்று பேருக்குமே ஒரு ஆரோக்கியமான போட்டி நடந்துகொண்டிருக்கிறது.

கண்டிப்பாக மூன்று பேருமே அதற்காக முழுவதுமாக உழைப்போம். மக்கள் நலப் பணிகளிலே ஈடுபடுவோம். தொகுதிக்கு என்ன தேவையோ அதை நாங்கள் செய்து கொடுப்போம். ஆனால், அதைச் செய்து கொடுத்ததற்குப் பிறகு நாடாளுமன்ற உறுப்பினர், வருகின்ற சட்டமன்றத் தேர்தலின் போது எங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

எனவே, 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அடிமைகளை விரட்டி தமிழ்நாட்டுக்கு விடியலைத் தேடித்தந்தார் நம்முடைய முதல்வர் அவர்கள், வருகின்ற 2024-இல் இந்தியா கூட்டணி மூலம், அடிமைகளின் ஓனர்களான பாசிஸ்ட்டுகளையும் இந்தியாவை விட்டு விரட்டுவோம் என்று கூறி, ஒட்டு மொத்த இந்தியாவுக்கும் நம்முடைய தலைவர் அவர்கள்தான் விடியலைத் தர இருக்கின்றார்கள். அதற்கு நாமெல்லாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் சிற்றரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியினுடைய செயலாளருமான தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், மருத்துவர் எழிலன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ராமலிங்கம், பரமசிவம், மா.பா.அன்புதுரை, மதன் மோகன், வினோத் வேலாயுதம், மாவட்டக் கழக நிர்வாகிகள் விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, அகஸ்டின் பாபு,

அணிகளின் மாநில நிர்வாகிகள் கென்னடி, கார்த்திக் மோகன், இறையன்பன் குத்தூஸ், குமரி விஜயகுமார், சந்திரபாபு, வி.பி.பொன்னரசு, வி.பி.மணி, ராம்குமார், அழகிரி சதாசிவம், கௌதமன்,

இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் குட்டி, இம்ரான் ஆருண், பாலச்சந்தர், தினேஷ்குமார், மோகனவேல், சார்பு அணிகளின் அமைப்பாளர் துபாய் விஜய், யோகேஷ்வரி சுந்தரேசன், லதா லாரன்ஸ், ரகமத்துல்லா, திருமலை பொன்னுரங்கம், அசோக்குமார், ராஜா, சீனிவாசன், ராஜராஜன், ரங்கராஜன், எம்.டி.ஆர். சாரதி மணிமாறன், அரவிந்த்குமார், டாக்டர் ஜீவகன் அய்யநாதன், பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார் உள்ளிட்ட வட்ட கழகச் செயலாளர்கள், கோ.ராணி ரவிச்சந்திரன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.